1987 நவம்பர் 13]

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) பட்டுக்கோட்டை தொகுதியில் காசங்காடு என்ற இடத்தில் கால்நடை கிளை நிலையம் இல்லை. ஆனால் அங்கு கால்நடை மருந்தகம் ஒன்று இயங்கி வருகின்றது. அந்த கால்நடை மருந்தகத்திற்கு கட்டிடம் கட்ட போதுமான நிதி வசதி இல்லாத காரணத்தினால், தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் நிதியுதவி பெற்று, கட்டிடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

மலைவாழ் இனத்தவர்களுக்கு உணவு விடுதியில் இடம்.

*111—(*வினா எண் 7325)* திருமதி இரா. சரோஜா : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இந்த ஆண்டு திருச்சி மாவட்டத்தில் எத்தனை மலைவாழ் இனத்தவர் உணவு விடுதியில் இடம் கோரி விண்ணப்பித்துள்ளார்கள்?

(ஆ) எத்தனை பேர் சேர்க்கப்பட்டுள்ளார்கள்?

(இ) எத்தனை பேர் திருப்பி அனுப்பப்பட்டுள்ளார்கள்? ஏன்?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : பேரவைத் தலைவர் அவர்களே, (அ) 1985–86 ஆம் ஆண்டில் திருச்சி மாவட்டத்தில் 392 மலைவாழ் மாணவர்கள் இடம் கோரி விண்ணப்பித்தனர்.

(ஆ) 389 பேர் விடுதியில் சேர்க்கப்பட்டனர்.

(இ) 3 மாணவர்களுக்கு மட்டும் வயது வரம்பைத் தாண்டியவர்கள் என்பதால் விடுதி வசதி அளிக்காமல் திருப்பி அனுப்பப்பட்டனர்.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு பதவி உயர்வில் ஒதுக்கீடு.

*112—(*வினா எண் 7588)* திரு. க. பாரமலை மற்றும் திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக அரசின் எந்தெந்த துறைகளில் பதவி உயர்வின் மூலம் நிரப்பப்படுகிற பதவிகளில் (Reservation in promotional post) ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி மக்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது?

(ஆ) அனைத்து துறைகளுக்கும் விஸ்தரிக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு பதவி உயர்வின் போது கீழ்க்காணும் துறைகளில் குறிப்பிட்ட சில பதவிகளுக்கு மட்டும் இட ஒதுக்கீடு செய்யப்படுகிறது :—

(1) வருவாய்த் துறை (துணை மாவட்ட ஆட்சியர் மற்றும் துணை வட்ட ஆட்சியர்) ;

(2) வணிகவரி துறை (வணிகவரி அலுவலர், உதவி வணிக வரி அலுவலர்) ;

(3) நெடுஞ்சாலை மற்றும் ஊரக வளர்ச்சித் துறை (உதவிப் பொறியாளர்) (நெடுஞ்சாலை) ;

(4) ஆவணப் பதிவுத்துறை (சார் பதிவாளர் II) பத்திரப் பதிவு) ; மற்றும்

(5) நில அளவை, நிலப் பதிவுருக்கள் (நில அளவையாளர், இளநிலை கணிப் பொறியாளர் மற்றும் படிஎடுப்பு உதவியாளர்)

(ஆ) அனைத்து துறைகளுக்கும் விஸ்தரிப்பது பற்றி அரசின் பரிசீலனையில் உள்ளது.

தாட்கோ தலைமை அலுவலகம்.

113—(*வினா எண் 12503) திரு. அ. பிரணவநாதன் மற்றும் திரு. கே. முத்துவேல் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாட்கோ தலைமை அலுவலகத்தை விழுப்புரத்திலிருந்து சென்னைக்கு மாற்றும் திட்டம் உண்டா?

(ஆ) ஆம் எனில், எப்போது மாற்றப்படும்?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.